# இலங்கை அரசியலில் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம்: 2015-2023 வரையான காலப்பகுதியை மையப்படுத்திய ஆய்வு

**பிரியந்தி, ஜெ.,கணேசலிங்கன், கே.ரீ .**

அரசறிவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

jpriya0522@gmail.com

*இலங்கை அரசியலில் ஆளும் வர்க்கத்தின் தலைமைத்துவம் இலங்கையின் வரலாறு முழுவதும் அதிக செல்வாக்குடையதாக விளங்குகின்றது. இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூகப்போக்கினை வடிவமைப்பதில் அத்தகைய தலைமைத்துவங்களுக்கு அதீத பங்களிப்பு காணப்படுகின்றது. சுதந்திரத்திற்கு பிற்பட்ட கால இலங்கை அரசியல் வரலாற்றில் அரசியல் தலைமைத்துவங்கள் அதிக செல்வாக்கு பெறத்தொடங்கின. அந்த வகையில் சுதந்திர இலங்கையின் அரசியல் திருப்புமுனையின் முன்னோடியான ஐக்கிய தேசியக் கட்சி காணப்பட்டது. அதன் தலைமைத்துவங்களான டி.எஸ். சேனநாயக்கா, டட்லி சேனநாயக்கா, ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ஆர். பிரேமதாசா ஆகியயோர் இலங்கையின் இருப்பினையும் வரலாற்றையும் தனித்துவமாக மாற்றியது குறிப்பிடத்தக்கதாகும். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவமானது ஜே.ஆர்.ஜெயவர்தனாவின் உறவான ரணில் விக்கிரமசிங்காவிடம் உள்ளது. ரணில் விக்கிரமசிங்காவினை பொறுத்தவரை இலங்கை அரசியலில் தவிர்க்க முடியாத ஆளுமையாகவே திகழ்ந்து வருகின்றார். 1977 ஆம் ஆண்டு தொடக்கம் பல்வேறு வெற்றி தோல்விகள் மத்தியிலும் தொடர்ச்சியாக இலங்கையின் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துவது மட்டுமல்லாது ஆளுமைமிக்க அரசியல்வாதி என்ற கௌரவம் ரணில் விக்கிரமசிங்காவுக்கு மட்டுமே உரியதாகும். அந்த வகையில் நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர், சபை முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர், பிரதமர், ஜனாதிபதி போன்ற அதிகார பதவி நிலையில் அரசியலில் பல்வேறு பதவிகளை வகித்து இலங்கையின் அரசியல் வரலாற்றில் அதிக முக்கியத்துவத்தை பெற்றுள்ளார். நல்லாட்சி அரசாங்க காலப்பகுதியிலும் பொருளாதார நெருக்கடி காலப்பகுதியிலும் ரணில் விக்கிரமசிங்கா தலைமைத்துவத்தினால் அனைத்து சவால்களையும் எதிர்கொண்டு செயற்படுகின்றதைக் காணமுடிகிறது. அரசியல் நெருக்கடி, பொருளாதார நெருக்கடி, கட்சிக்குள் எழுந்த உள்ளக முரண்பாடு, தலைமைத்துவப் போட்டி ஆகிய விடயங்கள் அனைத்தையும் வெற்றிகரமாக கையாண்டு வந்துள்ளதை அவதானிக்க முடிகிறது. அந்த வகையில் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தில் இலங்கை அரசியலில் ஏற்பட்ட மாற்றங்களையும் நகர்வுகளையும் இந்த ஆய்வு இனங்காணமுயலுகிறது.*

**திறவுச்சொற்கள் :** அரசியல் ஆளுமை, நல்லாட்சி அரசாங்கம், அரசியல் பொருளாதார நெருக்கடிகள், இராஜதந்திரம், வெளிநாட்டுக்கொள்கை.